ந.க.எண்.1292/2023/அ1
நாள். 06.10.2023.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு**
**கோயம்புத்தூர் மாவட்டம்**
**தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியம்**
**அறிவிக்கை (Notification)**

**அலுவலக உதவியாளர் காலிப்பணியிடத்திற்கு நேரடி நியமனம்**

கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றியத் தலைப்பில் காலியாக உள்ள 1 அலுவலக உதவியாளர் காலிப்பணியிடத்தினை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலிப்பணியிடங்கள் விவரம்**

| வ. எண் | பதவி | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | இனசுழற்சி |
|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | 1 | BC – பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (BC – Other than Backward Class Muslims) |

**கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகள்:**

அலுவலக உதவியாளர் பணிக்கு எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மிதிவண்டி ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்.

**வயது வரம்பு:**

01.07.2023 அன்று

| வ. எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) (BC – Other than Backward Class Muslims) | 18 | 34 |

**மேற்கண்ட அதிகபட்ச வயது வரம்பு பூர்த்தியடைந்தவராக இருக்கக் கூடாது.**

விண்ணப்பங்கள் பெறப்படும் நாள்: 16.10.2023 காலை 10.00 மணி முதல் 15.11.2023 மாலை 5.45 மணி வரை

**ஊதியம்:**

| வ. எண் | பணியின் விவரம் | ஊதிய விவரம் |
|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | ரூ.15700/- (ரூ.15700-50000/-) (Level-1) என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் இதர படிகளுடன் |

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரர்கள் கல்வித் தகுதி, இருப்பிடம், சாதிச் சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2. இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. அரசு விதிகளின்படி மேற்குறிப்பிட்ட இனசுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.
4. சுயமுகவரியுடன் கூடிய அஞ்சல் வில்லை ரூ.30/- ஒட்டப்பட்ட அஞ்சல் உறை-1 (10x4 Inches Postal Cover) இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு அரசாணை எண்.303, நிதி (ஊதியக்குழு) துறை நாள்:11.10.2017, அரசாணை எண்.305, நிதி(ஊதியக்குழு) துறை நாள்:13.10.2017 மற்றும் அரசாணை எண்.306, நிதி(ஊதியக்குழு) துறை நாள்:13.10.2017-ன்படி ஊதியம் மற்றும் அனுதிக்கப்பட்ட படிகள் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 15.11.2023 பிற்பகல் 5.45 மணிக்குள் கீழ்கண்ட முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்ப வேண்டும். **மாறாக பிறகு காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

**ஆணையாளர்**
**ஊராட்சி ஒன்றியம்**
**மாதம்பட்டி மெயின்ரோடு, தொண்டாமுத்தூர்**
**கோயம்புத்தூர் - 641109.**

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call Letter) பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் மற்றும் மாவட்ட இணையதளம் Coimbatore.nic.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

**ஆணையாளர்,**
**ஊராட்சி ஒன்றியம்**
**தொண்டாமுத்தூர்,**